REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 11 விலை ரூபா 5 30 ஆடி 1999

**பாதுகாவலன் பிரதிநிதிகள் நிருபர்களுக்கான கூட்டம்**

எதிர்வரும் ஆவணி மாதம் 14ந் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு (பு.நே) நிருபர்கள், எழுத்தாளர்களுக்கான கலந்துரையாடல் பாதுகாவலன் பணிமனையில் நடைபெறவுள்ளது. பாதுகாவலன் தினம் பற்றிய சில ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அனைவரும் தவறாது சமூகந் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
12 AUG 1999
PERIODICALS DIVISION

# வன்னி மக்களைக் காப்பாற்ற மனித நேயத்துடன் செயற்படுங்கள்

## ★மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் யாழ் ஆயரின் இரண்டாவது அவசர அழைப்பு

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மேன்மைதங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு இரண்டாவது அவசர கடிதமொன்றினை அனுப்பியுள்ளார். தமது முதலாவது கடிதத்தின் பின்னர் சுமூகமான முடிவு ஒன்றினைக் காணாத நிலையில் ஆயர் அனுப்பியுள்ள இந்த இரண்டாவது மடலிலே மருத்துவ வசதி இன்மையாலும், பட்டினியாலும் இறப்போர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரச தரப்பினரும், எதிர்கட்சிகளும் ஒன்றிணைந்து மனித நேயத்துடன் ஒரு பாதை திறக்க செயல்பட அழைக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 6ம் பக்கம்)

## வன்னி மக்கள் மீது கரிசனை காட்டி கடல் வழியாக விசேட நிவாரணத்தை அனுப்ப ஒழுங்கு செய்யுங்கள்

### ★மன்னார் ஆயரின் வேண்டுகோள்

மன்னார் ஆயர் பேரருட்திரு ஆர். ஜோசவ் அவர்கள் ஜூலை 17ம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வன்னியில் துன்புறும் அப்பாவி மக்கள் மீது கரிசனை காட்டி அவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து, பிளாஸ்டிக் கூடார விரிப்புகள் ஆகியவற்றை கடல் வழியாக அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாம் அப்பகுதிக்குச் சென்றிருந்த போது நேரிற் கண்ட உணவு, மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு, மக்கள் இருப்பிடமின்றி மரநிழலில் தங்கியிருந்தமை, குடிநீர், சுகாதாரப் பிரச்சினைகள் ஆகியனபற்றி அக்கடிதத்தில் விளக்கியுள்ளார்.

"இத் தேசியப் பிரச்சனையை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துவைக்க தாங்கள் எடுத்துவரும் முயற்சிகளை தொடருமாறு வேண்டுகிறேன். மேற்கில் யாழ்ப்பாணத்திற்கு பாதை திறக்கும் நடவடிக்கை வெற்றிபெற்றாலும் அது பலநூறு மக்களின் உயிர்களைக் குடித்துவிடும். ஆயினும் இந்தப் போரை அது ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் போவதில்லை, சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை, என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே துணிகரமான அரசியல் ஞானத்துடன் இராணுவ மயமாக்கலையும், போர் நடவடிக்கைகளையும் தைவிட்டு, மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வழிகளை ஆராயுமாறு வேண்டுகிறேன். இதன்மூலம் தங்களுக்கும், தாங்கள் ஆட்சி செய்யும் மக்களுக்கும் எத்தனையோ நன்மையான காரியங்கள் நடக்கும்"

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் ஆயர் அவசர அழைப்பு

## வன்னி மக்களுக்காக விசேடமாக செபியுங்கள்

கடந்த 27 நாட்களுக்கு மேலாக வன்னிக்கான அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டு அனைத்துப் போக்குவரத்தும் உணவு விநியோகமும் துண்டிக்கப்பட்ட நிலையில் வன்னி மக்கள் இருக்கிறார்கள். மருத்துவ வசதி இன்மையாலும் பட்டினியாலும் இறப்போர் தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்ற இந்த வேளையில் பாதை திறக்கப்படவும் வன்னி மக்கள் துயரம் நீங்கவும் செபிக்கும்படி ஆயர் அழைப்பு விடுத்துள்ளார்.

பாதுகாவலன் பத்திரிகைக்கு பிரத்தியேகமாக அவர் வழங்கிய செய்தியில் குடாநாட்டில் வாழும் மக்கள் வன்னியில் வாழும் எம் உடன் பிறப்புகளின் இன்னல்களை மனதில் கொண்டு இவ் ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்க வேண்டுகிறேன் என்றார்

## ஒழுக்கக் கட்டுப்பாடான கல்வியை அளிப்பதில் கிறிஸ்தவ பாடசாலைகள் முன்னணியில் இருக்கின்றன.

–யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கு வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி நடராச சுந்தரம்.

18.7.99 அன்று யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் இவ்வாண்டு பட்டப்படிப்பின் இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கத்தோலிக்க மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு, நல்லாயன் நடுநிலையத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. M. நடராச சுந்தரம் அவர்கள்,

"ஒழுக்கக் கட்டுப்பாடான கல்வியை அளிப்பதில் கிறிஸ்தவ பாடசாலைகள் முன்னணியில் நிற்கின்றன. அத்தோடு மட்டுமன்றி பல ஆண்டுகளுக்கு முன்னரே முகாமைத்துவ கலையை உலகிற்கு அளித்து அதை வளர்க்க பேருதவி புரிந்தவர்களும் கிறிஸ்தவ மிஷனறிமார்களே" என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நடைபெற்ற நன்றித் திருப்பலியை அருட்தந்தை ஜெயபாலன் குறூஸ், அருட்தந்தை றெஜீஸ் இராஜநாயகம் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரியாவிடை பெறும் மாணவர்களுக்கான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இளைப்பாறிய ஆயரின் அரும்பணி

XXV Years' Catholic Progress, By Rev. S. Gnana Prakasar, O. M. I. The Diocese Of Jaffna under The episcopate of Dr:Henry Joulain என்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருடைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நூல் மீள் பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

இளைப்பாறிய ஆயர் மேன்மைதங்கிய தியோகுப் பிள்ளை ஆண்டகையுடைய அயராத முயற்சியாலும், உதவியாலும் கத்தோலிக்க அச்சகத்தில் 'ஓவ்செட்' முறையில் இரண்டாம் பதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்படும் இந்நூல் ஆடிமாதம் 25ம் திகதி ஆயர் அவர்களுடைய பெயர்கொண்ட தினத்தில், வெளியிடப்பட்டது.

## ★வன்னியில் பட்டினிச் சாவு ★கணக்கற்ற கைதுகள் ★காணாமல் போதல் ★மனிதப் புதைகுழிகள்

### யாழ் மறைமாவட்ட நீதிசமாதான ஆணைக்குழுவின் கையொப்ப மகஜர்

### சமாதானத்திற்கான முன் முயற்சிகளை வேண்டி நிற்கிறோம்.

### –திருத்தந்தைக்கு யாழ் கத்தோலிக்க மக்கள் வேண்டுகோள்.

யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் யாழ் மறைமாவட்டத்தின் பங்குத் திருச்சபைகள் தோறும் கையொப்ப மகஜர் ஒன்றினை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

தொடர்ச்சி 6ம் பக்கம்)

## சின்னமடு திருத்தல விழா: ஆவணி 5

★ பிரயாண ஒழுங்கு ★ பாதுகாப்பு ஏற்பாடு ★ தங்குமிட வசதி

சின்னமடு மாதா திருவிழா ஆகஸ்ட் 5ம் திகதி கொண்டாடப்படும். 4ம் திகதி மாலை 5மணிக்கு நற்கருணை விழாவும், 5ம் திகதி காலை 7மணிக்கு முதற்திருப்பலியும், 9 மணிக்கு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் இடம்பெறும். 4ம், 5ம் திகதிகளில் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 4ம் திகதி இரவு ஆலய வளவில் தங்குவதற்கு பாதுகாப்பு ஒழுங்கும் அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திருவிழாவை சிறந்த முறையில் கொண்[illegible] ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சின்னமடு ஆரசினால் அங்கீகரிக்கப்பட்ட [illegible] மறைமாவட்ட யாத்திரைத்தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் பண்ணை யோசவாஸ் சிற்றாலயம்

கடந்த இடம்பெயர்வின் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் இருந்த யோசவாஸ் சிற்றாலயம் அதன் பரிபாலகர் அருட்திரு சனிஸ்ரன் அடிகளின் முயற்சியினால் மீளவும் ஆவணி 8ம் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கவிருக்கிறது. புனருத்தாரணம் செய்யப்பட்ட யோசவாஸ் சிற்றாலயத்தில் ஆவணி மாதம் திருப்பலி ஒப்புக் கொடுக்கபட இருக்கிறது. இந்த ஆலயத்தின் எழுச்சியிலும் வளர்ச்சியிலும் கவனமும், கரிசனையும் கொண்ட அனைவரையும் இத் திருப்பலியில் பங்கு கொள்ளும்படி அருட்திரு சனிஸ்ரன் அடிகளார் பாதுகாவலன் ஊடாக அழைப்பு விடுக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### வன்னி – இன்னும் எத்தனை காலம்

வன்னி மண்ணும் மக்களும் அனுபவிக்கும் தொடரான துன்பங்களும் துயரங்களும் சர்வதேச கவனத்தை அவர்கள்பால் திருப்பியுள்ளது. வன்னிப்பாதை மூடப்பட்டதை அடுத்து உருவாகியுள்ள துயரநிலை குறித்து மீண்டும் மீண்டும் விபரித்தும் விமர்சித்தும் எத்தனையோமுறை பலரால் அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தாயிற்று. ஆனால் சர்ச்சைகளும் சங்கடங்களும் அதுகுறித்த வாதப் பிரதிவாதங்களும். இழுத்தடிப்புக்களும் நடந்துகொண்டிருக்கின்றனவே ஒழிய முடிவு ஏற்படக்காணோம். இவர்கள் மட்டில் அரசு அக்கறை காட்டுவதாயில்லை. வன்னி மக்களும் இலங்கைக் குடிமக்களே. அவர்களையும் காக்க வேண்டியது அரசின் கடனாகும். அரசை இவர்கள் ஆதரிக்கிறார்களா, இல்லையா? என்ற வினாவின் விடை அரசின் கடப்பாட்டை எந்த விதத்திலும் குறைக்காது. தன் மக்கள் நோயினாலும் பட்டினியாலும் இறந்து கொண்டிருக்கும்போது அரசு தன் கௌரவத்தையும் பாதுகாப்பையும் மட்டுமே கருத்தில் கொண்டிருந்தால் அதை மக்களின் அரசு என்று எப்படிக் கூறலாம். அரசு, வன்னி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையில் உடனடியாக செயற்பட்டு பாதையைத் திறக்க வேண்டும் என்று யாழ் ஆயர், இரண்டு தடவைகள் மேன்மைதங்கிய ஜனாதிபதியை கேட்டுள்ளார். ஆயருடைய இந்த வேண்டுகோளின் பிரதிகள் இராணுவத் தளபதிக்கும் எதிர்கட்சித் தலைவருக்கும், அனுப்பப்பட்டுள்ளன.

கொடிய யுத்தத்தினாலும் பல்முறை இடம்பெயர்வுகளாலும் வெகுவாய் நொந்திருக்கும் எம் மக்கள் பசி, பட்டினியால் செத்துமடியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். மருத்துவ வசதி இன்மையாலும், பட்டினியாலும் இறப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்பேரழிவில் இருந்து மக்களைக் காப்பாற்ற அரச தரப்பினரும் எதிர்க்கட்சிகளும் ஒன்றித்து மனித நேயத்துடன் ஒரு பாதை திறப்பதற்கு உடன் செயற்பட வேண்டுகிறேன்- என்ற ஆயரின் வேண்டுகோளை நாமும் வலியுறுத்துகிறோம்.

அடுத்ததாக, இப்போது பாதை திறக்கப்பட்டாலும் அது எவ்வளவு காலத்திற்கு திறந்திருக்கும்? அடுத்த இராணுவ நடவடிக்கை தொடங்கியதும் அது மீண்டும் மூடப்பட்டுவிடும். குண்டுவீச்சும் எறிகணைத் தாக்குதலும், தொடரும். மீண்டும் இடம்பெயர்வு, உயிரிழப்பு, பொருள் இழப்பு, அகதி வாழ்க்கை. இதுதானே இதுவரை நடந்துள்ளது.

ஆகவே வன்னிப் பிரச்சினை மட்டுமல்ல, நாட்டுப் பிரச்சினையே விரைவில் தீர்த்து வைக்கப்படவேண்டும். அதுவும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில், ஒருவருக்கும் தீங்கு ஏற்படா விதத்தில் தீர்த்து வைக்கப் படவேண்டும். மக்கள் எக்கேடு கெட்டாலென்ன என்ற மனப்போக்கு ஒரு ஜனநாயக அரசுக்குத் தகாது.

# வன்னி மக்கள் துயர் உடன் தீர வேண்டும் –இது தமிழர்களின் குரலாய் மட்டுமல்ல, மனித நேயமுள்ள அனைவர் குரலாயும் ஒலிக்க வேண்டும்

கடந்த ஒரு மாதமாக வன்னிப்பகுதிக்கான தொடர்புகள் யாவும் துண்டிக்கப் பட்டுள்ள காரணத்தால் அப்பகுதியில் வாழும் மக்கள் அனுபவித்துவரும் சொல்லொண்ணாத் , துயரங்கள் பற்றி தொடர்பு சாதனங்கள் வாயிலாக ஓரளவு அறிந்துள்ளோம்.

அண்மையில் கடல் வழியாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு சென்று வந்த மன்னார் ஆயர் அவர்கள் அங்குள்ள நிலைமையை நேரிற் கண்டு வந்துள்ளார். "வன்னியின் நிலை மிக மிக மோசமாக உள்ளது. வன்னியின் மக்கள் படும் அவல நிலையை சொல்லில் விபரிக்க முடியாது" என்று கூறியுள்ளார். சுமார் 900 குடும்பங்கள் தேவன்பிட்டிப் பகுதியில் இடம்பெயர்ந்து மரங்களுக்குக் கீழேயும் வீதியோரங்களிலும் வாழ்வதாகவும், உணவும் குடிநீருமின்றி அல்லல்படுவதாகவும் கூறியுள்ளார். மண்ணெண்ணெய் 120 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 100 ரூபாவாகவும் விற்கப்படுவதாகவும், அரிசியைத் தவிர மற்றெல்லாப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மன்னார் ஆயர் கூறியுள்ள விடயங்களை ஏனைய செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன. வன்னிப்பகுதி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமாக இருக்கிறபடியால் எப்போதுமே அது புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் வன்னிக்குச் செல்லும் பாதை மூடப்படுவது வழக்கமாய் இருந்தது. ஆனால் சிறிது இடைவெளியின் பின் மீண்டும் அது திறக்கப்பட்டு போக்குவரத்துக்கள் மீளவும் ஆரம்பிக்கும். ஆனால் ரணகோஷ படை நடவடிக்கையுடன் அது கால வரையின்றி மூடப்பட்டுவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றி அரசாங்கத்திற்கு பன்முறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. தமது பிரதேசத்தில் நிலவும் மிக மோசமான நிலைமைகள் பற்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி அவர்களுக்கு இரு கடிதங்கள் அனுப்பியுள்ளார். அவற்றில் பாதை மூடப்பட்டுள்ளமையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை விளக்கி பாதையை விரைவாகத் திறக்க வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தியுள்ளார்.

ஆனால் பாதையைத் திறப்பதில் தேவையற்ற முட்டுக்கட்டைகளை அரசாங்கம் போட்டு வருகிறது. எந்தப் பாதையைத் திறப்பது என்பதில் பிரச்சனை, அதை எப்படித் திறப்பது என்பதில் பிரச்சனை. வவுனியா-மாங்குளம் வீதியையா, அல்லது யாழ்-கண்டி வீதியையா, அல்லது மன்னார்-உயிலங்குளம் வீதியையா? எதைத் திறப்பது, போக்குவரத்துப் பாதையைத் திறக்கும்போது எல்லையிலுள்ள -இராணுவ சூனியப் பிரதேசம் எப்படி அமைய வேண்டும் என்பதையிட்டு இருசாராருக்கும் உடன்பாடு ஏற்படுவதாயில்லை. இருசாராரும் இதில் தமக்கு ஏற்படக்கூடிய சாதக பாதக விளைவுகளுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். இதற்குமுன் பாதைகள் திறக்கப்படும்போது அப்பாதைகள் இராணுவ நடவடிக்கைக்குப் பயன்படுத்தப் பட்டமை விடுதலைப் புலிகளிடத்து ஓர் ஐயப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

பாதை திறப்பில் இந்த இழுபறிநிலை இருக்க, மக்களுடைய நிலைமையோ வர வர மோசமாகிக் கொண்டிருக்கிறது. உணவுப்பொருள், மருந்து வகைகள், எரிபொருள் போன்ற பொருட்களின் பற்றாக்குறை உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. முக்கியமாக குழந்தைகளுக்கு தேவைப்படும் பால்மா, கர்ப்பிணிகளுக்கும் நோயாளருக்கும் தேவையான மருந்துகள், சத்துணவுகள் பெரும் தட்டுப்பாடாக உள்ளன. மின்சார வசதியில்லாத இப்பிரதேசத்தில் இன்றியமையாத பொருளான மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு.

வன்னி மக்களின் மற்றொரு இடர்ப்பாடு வைத்திய வசதியின்மை, சுகாதாரச் சீர்கேடுகளினாலும், தடுப்பு மருந்துகள் இல்லாமையாலும், உளவியல் தாக்கங்களினாலும் இங்கு நோய்வாய்ப்படுவோர் தொகை அதிகம். அத்துடன் குண்டு வீச்சுக்கள் எறிகணைத் தாக்குதல்களி களில்லை. கடுமையான நோயுற்றவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வவுனியாவுக்கு சிகிச்சைக்காக கொண்டுவரப்படுவது வழக்கம். ஆனால் தற்போது அந்த வசதி இல்லாததால் எத்தனையோ நோயாளிகள் உயிரிழக்க நேர்ந்துள்ளது. அப்பாவி மக்களின் உயிர் அநியாயமாகப் பலியாகும் இவ்வேளையில் பாதைத்திறப்பை இழுத்தடிப்பது மனிதாபிமானமற்ற செயலாகும். வன்னியை பொறுத்தமட்டில் அரசாங்கம் எப்போதும் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையையே கடைப்பிடித்துவந்துள்ளது. 1995இன் பாரிய இடம்பெயர்வின் போது வன்னி சென்ற மக்களுள் பெருந்தொகையினர் இன்னும் அங்கு தங்கியுள்ளனர். இவர்கள் யாவரும் தமது சொத்து சுகங்களைக் கைவிட்டு அகதிகளாகச் சென்றவர்கள். தமது தொழில்துறைகளை கைவிட்டுச் சென்றமையால், அங்கு தொழில் வாய்ப்பின்றி பொருளாதார நெருக்கடியில் வாழ்கின்றனர். கிடைக்கும் அற்ப சொற்ப உணவைக்கூட வாங்க பணவசதியின்றி ஒரு மெதுவான பட்டினிச் சாவிற்கு இரையாகிக் கொண்டிருக்கிறார்கள். நெருப்புக் காய்ச்சலினால் தாயையும், பட்டினியால் தந்தையையும் பறிகொடுத்த பிள்ளையின் அவலக் கதை இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

சாதாரணமாகவே இத்தகைய தட்டுப்பாடு நிலவும் வன்னியில் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் மக்களின் உயிர் நாடியாகிய பாதை மூடப்படுவதும் நிவாரணங்கள் நிறுத்தப்படுவதும் வழக்கமாகிவிட்டது. இதனைப் பன்முறை அனுபவித்தவர்கள் வன்னி மக்கள்.

மேலும் அரச அதிகாரிகள் குடிசனத் தொகையை கணிப்பீடு செய்து தேவைப்படும் நிவாரணத்தை அரசிடம் கோரியுள்ள போதிலும் அவர்களது கணிப்பீடு புறக்கணிக்கப்பட்டு, இராணுவத்தினர் நிர்ணயித்த குறைவான நிவாரணமே அங்கு அனுப்பப்பட்டு வந்துள்ளது. இது இராணுவத்திற்கு வரையறையற்ற அதிகாரத்தை கொடுத்ததனால் வந்தது.

வன்னி நெல் விளையும் பிரதேசமாக இருப்பதால் தான் அங்கு அரிசிக்கு பேரழிவுகள் நிகழாமல் இருப்பதற்கு அப்பிரதேசத்தின் இயற்கை வளமே காரணம். ஆயினும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இராணுவத் தாக்குதல்கள் காரணமாகவும் இடம்பெயர்வுகளினாலும், விளைநிலங்கள் அழிக்கப்படுவதாலும், சில சமயங்களில் வெள்ளம் அல்லது வரட்சி காரணமாகவும் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

வன்னி மக்களின் துயர் கண்டு சர்வதேச சமுதாயம் உதவ முன்வந்த போது இது உள்நாட்டு பிரச்சினை என்றுகூறி அரசு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. அரசு செய்யத் தவறும் உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்மாலான வரையில் அளிக்க முன் வந்துள்ளன. அவற்றின் உதவியினால் தான் வன்னிக்கு அகதிகளாக வந்த மக்கள் ஓரளவு ஆறுதல் பெறமுடிந்தது. ஆனால் அரசோவெனில் இந் நிறுவனங்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பாதையை மூடி அவர்கள் தமது பணியைச் செய்ய முடியாமல் தடுப்பது மனிதாபிமானமற்ற செயலாகும். ஐ. நா. மரபுகளின்படி உணவும், மருந்துகளும் யுத்த கருவிகளாக பயன்படுத்தப்படக்கூடாது. ஆனால் அரசோ தான்தோன்றித்தனமாக நடப்பது மட்டுமல்லாமல், தனது செயலை நியாயப்படுத்துகிறது. வன்னியின் நிலைமையை இருட்டடிப்பு செய்ய முடிகிறது. ஆயினும் இதெல்லாம் வெளியுலகிற்குத் தெரியாமல் இல்லை. ஆனால் சட்டரீதியான அரசாங்கத்தின் அனுமதியின்றி வெளியார் யாரும் தலையிடப் போவதில்லை.

ஆகவே இலங்கை அரசு தனது போக்கை மாற்றிக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல, இலங்கையின் பிறபாகங்களில் வாழும் தமிழர்கள், வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ் அரசியற் கட்சிகள், சமய ஸ்தாபனங்கள் ஆகிய பல திசைகளிலிருந்தும் அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இது தமிழர்களின் குரலாய் மட்டுமல்ல மனித நேயமுள்ள அனைவரதும் குரலாய் ஒலிக்க வேண்டும்.

**❖ அப்பாவி மக்களின் உயிர் அநியாயமாகப் பலியாகும் இவ்வேளையில் பாதைத்திறப்பை இழுத்தடிப்பது மனிதாபிமானமற்ற செயலாகும்**

**❖ வளம் மிகுந்த இலங்கை நாட்டிலே பட்டினிச்சாவு ஏற்பட்டது இதுதான் முதன்முறை என்று சொல்லலாம்**

**வன்னி, நெல் விளையும் பிரதேசமாக இருப்பதால்தான் அங்கு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை** *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுச் சித்திரம் 2

### பிறந்த நாள்


~வானம்பாடி

இன்னும் பத்துநாட்களில் என் பிறந்த நாள் வந்துவிடும்.
வயது 20ஐக் கொண்டாடியது நேற்றுப்போல் இருக்கிறது.
சென்ற பிறந்த நாள் நினைவுடன்
என் நண்பியின் நினைவும் கூடவே வந்துவிடும்.
பிறந்தநாளுக்கு என்னநிற உடுப்பு எடுக்கவேண்டும் !
என்ன ஸ்ரயிலில் தைக்க வேண்டும் !
என்னென்ன சோட்ஈற்ஸ் செய்யவேண்டும் !
என்பதெல்லாம் அவளின் விருப்பத்திற்கே விட்டுவிட்டேன்.
அவள் என் பிறந்தநாளுக்குத் தந்த அல்பம் !
அதில் விஜயின் பல பல போஸில் எடுத்த அழகிய படங்கள்
அவள் நினைவே அதில் படங்களாக இருந்தன.
என் கண்கள் அவள் நினைவால் கண்ணீரால் நிரம்பின
கன்னம் வழியே வழிந்து ஓடின
"அக்கா ஏன் அழுகிறாய்" என்று என் தங்கை கேட்டாள்.
"டானியா நினைப்பு! ஏனோ அழுகை வந்துவிட்டது" என்றேன்.
"அவ எங்கே போய்விட்டா, கொழும்புக்குத் தானே"
கண்ணைத் துடைத்தேன். என்னுள் இருவர்
பேசுவதுபோல் கேட்டது. ஒருவர் சொன்னார்
"பிறந்த நாளை இன்றைய துன்பகரச் சூழலில்
ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டுமா?"
மற்றவர் சொன்னார் "வருடம் ஒருமுறை வரும் பிறந்த நாள்!
இன்று இருக்கும் நாம் நாளை இருப்பமோ தெரியாது.
கொண்டாடவேண்டியதை கொண்டாடவேண்டியதுதானே",
அம்மா "என்ன பிள்ள யோசிக்கிறாய் ! இதென்ன அல்பம் !
ஓ டானியா நினைப்போ!
எல்லோரும் ஒருநாள் பிரிந்துதான் ஆகவேண்டும்
பிறந்த நாளுக்கு என்ன செய்ய யோசனை?" என்று கேட்டா.
அப்பொழுது போஸ்ற்மன் மணி அடித்தான்.
ஓடிச்சென்று கடிதத்தை வாங்கினேன்
தங்கச்சியும் ஓடி வந்தாள். அம்மாவும் வந்தார்.
அம்மாவுக்கு ஒரு கடிதம் அப்பாவிடம் இருந்து,
மற்றது எனக்கு அப்பாவிடம் இருந்து
அழகிய பிறந்த நாள் வாழ்த்து மடல்.
வாழ்த்து மடலைத் திறந்தேன். அது இசை எழுப்பியது.
மடலில் அப்பா எழுதியிருந்தார்.

*மகனே!*
*எரியும் மெழுகுதிரியாய் ஒளி கொடுப்பாய்!*
*வீசும் தென்றலாய் சுகமளிப்பாய்!*
*அன்பர் யேசுவின் பாதையில்*
*அனைவருக்கும் மாதிரியாய் வாழ்ந்திடுவாய்!*
*பிறந்தநாள் புதுமாதங்கள் திறக்கும் புதுப்பயணம்*
*பிறந்தநாள் பரம தந்தையின் அன்புக்கொடை*
*பிறந்தநாள் பயணத்தின் காலக்கல்*
*எனவே வாழும் நாளில்*
*இறையுணர்வுடன்*
*அன்பு இதயத்துடன்*
*இனிதே வாழ்ந்திட வாழ்த்தும்*
*அன்பின்*
*அப்பா*

அப்பாவின் வாழ்த்தைப் பலதடவை படித்தேன்.
என்னுள் இருந்த இருவர் ஒன்றாகி ஒரே குரலில்
"அன்பியம் ஒளிர
அடுத்தவர் அகத்தின் மலர்வில் மகிழ
உன் பிறந்தநாள் அமையட்டும்",
எனக் கூறினர்.
விஜயின் அல்பத்தை மூடினேன்.
அம்மா, "மகள் அப்பா உனக்கு பிறந்தநாள் பரிசாக
அருமையான புத்தகம் ஒன்று
கனடாவில் இருந்து வருகிறவரிடம்
கொடுத்துள்ளதாக எழுதியுள்ளார்".
அப்பாவின் தெரிவு எப்பொழுதும் எனக்குப் பிடிக்கும்.
என்மனம் தெளிவு பெற்றது

## 3 உரிமைகள்... உரிமைகளுக்காக...




### குரலற்றவர்க்காய் ஒலித்த குரல்

1975ம் ஆண்டு, ஆனித்திங்கள் 21ம் நாள் நள்ளிரவு, தேசியப்படையினர் ஒரு கிராமத்துள் புகுந்து, துப்பாக்கிகளால் சுட்டும் கைக்கோடரிகளால் கொத்தியும் மக்களைத் தாக்கினர். இதில் ஐந்து பாமரமக்கள் உயிரிழந்தனர். படையினரோ, அன்றேல் அவர்களைத் தமது பேராசைகளுக்காக பாவித்த செல்வந்தரோ, தாம் நினைத்தபடி இந்த அட்டூழியங்களை அச்சமின்றிக் கட்டவிழ்த்து விடுவார்கள். யார் கேட்பது? அதிகாரமும் நீதிமன்றங்களும் அவர்கள் கையிலிருக்கும்போது என்ன பயம்? பாமர மக்களா? இவர்கள் படிப்பறிவோ, பணமோ அற்ற பலவீனர்தானே; குரலற்ற மௌனிகள் தானே! அந்த அகோரச் சம்பவம் பற்றி ஆயர் ரொமேரோவின் மனதில் இருவகையான சிந்தனை ஓட்டங்கள் தோன்றின. ஒருபுறம், ஆளும்வர்க்கத்துடன் ஒருங்கிணைந்து போகும் பழமைவாதப்போக்கில், கிறிஸ்தவ வாழ்வும் குருப்பணியும் கோவில் சுவர்களுக்கிடையேதான் என்றவாறு மதச்சடங்குகளை பிசகின்றி நடத்துவதே என்கடன் என்ற சிந்தனை மறுபுறம், அப்பாவி மக்களுக்கெதிராய் இழைக்கப்பட்ட அநியாயம் பற்றி எவ்வாறு பாராமுகமாயிருக்க முடியும் என்ற மனக் கொந்தளிப்பு.

கொல்லப்பட்டவர்களுக்காக ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். மனித உரிமைகள் மீது நடாத்தப்பட்ட வன்செயல்களைக் கண்டித்தார். அவ்விடத்துப் படையினரின் கட்டளைத் தளபதியிடம் முறைப்பட்டார். ஆயரின் பழமைவாதப் போக்கில் இது ஒரு மாற்றத்தை வெளிப்படுத்தினாலும் புரட்சிகரமான மாற்றம் என்று சொல்வதற்கில்லை. இச்சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மொலினாவுக்கு எழுதிய கடிதத்தில், "இப்படியான செயல்கள் மீண்டும் நடைபெறாதென எண்ணுகிறேன்" என்று மிகவும் பதுமையான - ஆட்சேபனையையல்ல - நம்பிக்கையை மாத்திரமே வெளிப்படுத்தினார்.

"திருச்சபை தாக்கப்படவில்லை; தாக்கியோரின் நோக்கம் என்பது பற்றியோ, தாக்கப்பட்டோரின் குற்றம் எவ்வளவு பாரதூரமானது என்பது பற்றியோ தெளிவில்லாததால், பகிரங்கக் கண்டனம் தெரிவிப்பதை தவிர்த்து, தனிப்பட்ட முறையில் முறையீடு செய்துள்ளேன்" என்று தனது நடவடிக்கையை சக ஆயர்களுக்கு நியாயப்படுத்தினார். அவ்வாண்டு உரோமைக்கு சென்றபோது, தம் நாட்டிலே ஏழைகளின் மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றி யேசு சபையினர் புகுத்தி வந்த புதிய சிந்தனைகளையும், குருக்களின் ஈடுபாடுகளையும் கண்டித்து "திருச்சபை அரசியல்மயமாக்கப்படுகிறது" என்று முறையிட்டார்.

'ஆலய வழிபாடுகளை நிறைவேற்றி ஏழைகளுக்குப் பசி, துயர்நீக்க அவ்வப்போது ஏதோ பண உதவி செய்து விட்டால் எனது கிறிஸ்தவ கடமைகளை நான் நிறைவேற்றி விடுகிறேன்' என்று எண்ணிய ஆயருக்கு, உயிரற்றதாகிய கல்லினாலான கட்டிடமல்ல. உயிர்வாழ்பவர்களாகிய மக்களே ஆலயம், மக்களே திருச்சபை; ஏழைகள் துயர்க்கு பணஉதவி தற்காலிகமான, மேலோட்டமான தீர்வேயொழிய, அத்துயர்களின் காரணிகளாகிய அநீத சமூக அமைப்புக்களையும் அவற்றை ஏற்படுத்தி பேணுவோரையும் நெறிப்படுத்துவதே உண்மையான தீர்வு, அதற்காக உழைப்பதே இறையரசைக் கட்டியெழுப்பும் கிறிஸ்தவப்பணி. என்ற சிந்தனை அந்நியமாகவேயிருந்தது.

அதேவேளை, நாட்டில் அமைதியின் நிலை குலைவு அதிகரித்துக்கொண்டே வந்தது. காணி, நிலம் சார்ந்த சீர்திருத்தச் சட்டமொன்று முன்வைக்கப்பட்டது. நாம் முன்னர் கண்டது போன்று, நாட்டின் பயனுள்ளதாகிய எண்பது சதவீத நிலத்தில், அறுபது சதவீதமான நிலம் சனத்தொகையின் இரண்டு வீதத்தினருக்கே சொந்தமாயிருந்தது. எஞ்சிய தொண்ணூற்றெட்டு வீதத்தினரும் தமக்கென்று சொந்தக்காணியின்றி அங்கு குடியிருப்பவர்களாய் மிகக் குறைந்த கூலிக்கே வேலை செய்தனர். காணிநிலம் பற்றிய சீர்திருத்தம் அவசியமானதொன்றாய் இருந்தது.

முன்கொணரப்பட்ட சீர்திருத்தமோ சிறியளவிலானதுதான். ஆனால் அதையும் விட்டுவைத்தனரா ஆதிக்கம் கொண்டவர்கள்? பலவந்தமான அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் அந்த அடக்குமுறையில் ஒரு வித்தியாசம் இருந்தது. இதுவரை பொதுமக்கள் மாத்திரமே இலக்காயிருந்தவிடத்து இம்முறை குருக்கள், கன்னியர் பொறுப்பான பொது நிலையினர் ஆகிய சிலரும் தாக்குதலுக்கு இலக்காயினர். ஏழைப் பாமர மக்கள் சங்கங்களாக ஒழுங்கமைக்கப்பட்டு சான்சல்வடோர் நகரின் பேராயர் லூயிஸ் சாவேசுடைய ஆசீர்வாதத்தையும் பெற்றதே இந்தப் புதிய பரிமாணத்தின் காரணம். (எனினும் ஆதிக்கம் செலுத்துவோர் தொடர்பான சமூக விடயங்களில் குருக்கள், கன்னியர் ஈடுபடுவதை திருச்சபையின் தலைப்பீடம் பொதுவாக விரும்பவில்லை)

1977இல் பேராயர் லூயிஸ் இளைப்பாறும் காலம் வந்தபோது அவருடைய வாரிசாக நியமிக்கப்படவிருப்பவர் எப்பேர்ப்பட்டவரென்ற கேள்வி பரவலாக எழுப்பப்பட்டது. பலரின் உரிமைகளைப் பறித்து ஒடுக்குமுறையின் பலத்தில் தம்மை நிலைநிறுத்தியவர்களுக்கு சவாலாக எழுந்து அநீதியையும் அதர்மத்தையும் அழித்து இறையரசின் தன்மைகளைக் கொண்டதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புபவராய் இருப்பாரா? அல்லது தற்போதைய நிலையோடு ஒத்துநின்று பிரச்சினைகளைத் தவிர்த்துச் செல்லும் சந்தர்ப்பவாதியாயிருப்பாரா? என்றெல்லாம் அலசப்பட்டது.

உரோமைத் தலைமைத்துவம் பிரச்சினையை விரும்பாதுதானே. வசதியாக ஆயர் ரொமேரோவை உரோமைத் தலைமையகம் பேராயராக நியமனம் செய்தது. எல்சல்வடோரின் ஆளும் கட்சியினர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ரொமேரோவின் நியமனத்தைச் சாதகமான சந்தர்ப்பமாகப் பாவித்து ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக முன்வந்து சேவையில் ஈடுபட்ட குருக்களை நெருக்கத் தொடங்கினர். நாளிதள்களிலும், தொலைக்காட்சியிலும் அவர்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். ஆறு குருக்களைக் கைதுசெய்து கொடூர சித்திரவதைக்கு உட்படுத்தி பின்னர் கௌத்தமாலாவுக்கு நாடுகடத்தினர்.

இவற்றின் மத்தியில் பெருமளவு மௌனமாயிருந்த புதிய பேராயர் ரொமேரோவின் மனதை, அவர் நியமனம் பெற்று நான்கு வாரங்களின் பின் இடம்பெற்ற ஓர் கொடூரச் சம்பவம் குமுறவைத்தது.

1977ம் ஆண்டு பங்குனித் திங்கள் 12ம் நாள் . . .

(வளரும்)

## ஆசிரியப் பணியை வளமாக்க

Sr. M. டன்ஸ்ரன் (தி. கு.)

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற்கொப்ப திருக்குடும்ப சபை ஆசிரிய துறவிகள் தம் சபையில் பெற்ற புத்தூக்கத்தை ஆசிரிய சமூகத்துடன் பகிர்வதில் பெரும் மகிழ்வடைகின்றோம். சபையின் ஆரம்ப நிலையை அதாவது பிரான்சிய புரட்சியால் பிளவுபட்ட, சிதைந்த சமுதாயம் போன்றதே இன்றய நம் சமுதாயம், இச்சமுதாயத்தைச் சீராக்க, இணைக்க, வாழ்வு கொடுக்க இறைவன் நம்மை அழைக்கின்றார்.

தொடரும் போரினால் பிளவுபட்டு, நொறுங்குண்டு ஈடாடிக்கொண்டிருக்கும் குடும்பங்களில் இருந்து வரும் சிறுவரை நல் காவல் தூதுவராக அரவணைத்து, விளங்கி, அவர் நிலையில் எதிர்கால நல் சமுதாயத்திற்கு வேண்டிய உருவாக்கத்தைக் கொடுப்பதே நம் பணி, எதிர்கொள்ள இருக்கும் நூற்றாண்டைச் சந்திப்பதற்கு ஏற்ற அறிவும், மனப்பக்குவமும் கொண்டவர்களாக உருவாக்க அழைக்கப்படுகின்றோம். தந்தைக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஆண்டில் கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் எமது பொறுப்பில் உள்ள சிறுவர்களை தந்தையின் பிள்ளைகளாக, எமது சகோதரராக உறவினராகக் கருதிச் செயற்படுவோமானால் கல்வியையும், இறை பக்தியையும், நற்பண்புகளையும் கொடுத்து உருவாக்குவோம். பாரபட்சங்களைத் தவிர்த்து சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும். ஐக்கியத்தையும் கட்டி எழுப்புவோம்.

துறவிகளுக்கு திருத்தந்தை எழுதிய மடலான "Vita Consecrata" வில் "கல்வி உலகில் துறவிகளின் பிரசன்னம்" என்ற பகுதியில் உள்ள 96-99 வரையான இலக்கங்களில் கல்விப்பணியின் முக்கியத்துவத்தை திருச்சபை உணர்ந்துள்ளது எனக்கூறுகிறார். ஒவ்வொரு மனித உள்ளத்தையும் ஊடுருவும் தூய ஆவியானவரின் அருட்துணையோடு இப்பணி நிறைவேற்றப்பட வேண்டும். வரலாற்றின் எசமானைச் சந்திக்கும் நோக்குடன் கல்வி உலகிற்கு சாட்சியம் பகர வேண்டும். எமது செயற்பாடுகள் ஏனைய ஆசிரியர்களுக்கு பெரும் நன்மை பயப்பனவாக அமைய வேண்டும்.

மானிட முதிர்ச்சி அடைய இளம் சமுதாயத்தை ஊக்குவிக்க தங்கள் நற்செய்திச் சுதந்திரத்தையும் பிறர் அன்பையும் பயன்படுத்தி செயற்படும்போது கற்பிக்கும் குழு மாணவ உலகிற்கு திருவருட்சாதனமாக மாறுகிறது.

இன்றைய தேவைகள் விடும் சவால்களுக்கு முகம் கொடுக்க ஆசிரிய துறவிகளும் அழைக்கப்படுகின்றனர். இறைவார்த்தைப் பணியில் ஈடுபடுவோர் காலத்தின், இனத்தின், சமூகத்தின் தேவைகளை உய்த்துணர்ந்து அதற்கேற்ப அறிவு ஆற்றல்களை விருத்தி செய்யவேண்டும். பிறர் பணி செய்யும் அதே வேளையில் சொந்தப் புதுப்பித்தல் அறிவு வளர்ச்சியில் கரிசினை எடுக்க வேண்டும். இக்கரிசினை குறையும்போது அப்போஸ்தலப் பணியில் பின்னடைவு [illegible] உண்மையும் தோன்றுகிறது.

சமூகத்தொடர்பு சாதனங்களை நன்மை பயக்கும் வகையில் மக்கள் உபயோகிக்க வழிகாட்ட வேண்டும். செவிசாய்க்கும் தன்மையை, செய்திகளைப் பரிமாறும் ஆற்றலை விருத்தியாக்கவும் சாட்சியமான வாழ்வு முறையினால் கற்பிக்க வேண்டும்.

எனவே பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு பணியாற்றும் ஆசிரியர்கள், மாணவர், அவர் பெற்றோரின் வாழ்வின் எல்லா நிலைகளிலும் பிரவேசித்து, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு, அதிகாரிகளாக அல்ல, நல்ல ஆயனுக்குரிய மனநிலை படைத்தவர்களாக, வறியவர்களுக்கும் சமுதாயத்தின் வரம்புகளுக்கு தள்ளப்பட்டவர்களுக்கும், மெல்லக் கற்போருக்கும் முன்னுரிமை கொடுத்து செயற்படுவார்களாக. எல்லை மீறிய ஒழுக்கக் கட்டுப்பாட்டு காப்பாளராக இல்லாது சட்டமும் ஒழுங்குகளும் மாணவர்களை நற்பிரசைகளாக உருவாக்க உதவுகிறதா என சீர்தூக்கிப் பார்த்துச் செயற்படுவோம். இறைவனில் எளிய பணியாளர்களாக வாழ்ந்து கல்விப் பணியூடே இறைவனின் ஆழமான அன்பையும் விசுவாசத்தையும் மாணவர், ஆசிரியர், பெற்றோர் ஏன், தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் விதைக்க, வளர்க்க முயல்வோம். உண்மைத் தன்மையுடன் உய்த்துணர்ந்து செயலாற்றி அனைவரையும் இணைக்கும் பாலங்களாக சமாதான நற்செய்தித் தூதுவராகச் செயற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவலன் கண்மணிகள்

| ஒளி : 10<br>சுடர் : 2 | "எம் விழிகளின் ஒளி யேசு எம் வாழ்வின் வழி யேசு" |
|---|---|

அன்பு நிறை கண்மணிகளே!

இறை இயேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. சுடர் !ஐ படித்தவர்கள் உங்களிடம் கேட்ட கேள்விக்கான பதிலை விரைந்து அனுப்புங்கள்.


**அங்கத்துவம் பெற விரும்புவோர் பின்வரும் தரவுகளை எழுதி அனுப்புங்கள்.**

உங்கள் பெயர்; படிக்கும் பாடசாலை; வகுப்பு. வீட்டு முகவரி. உங்கள் பெயர் அங்கத்துவ எண்ணுடன் காவலன் கண்மணிகளில் வரும்.

**நல் வாசிப்பு**
**அறிவுக்கு உணவாகும்**
**உடலுக்கு ஊக்கம் தரும்**
**மனதுக்கு மகிழ்ச்சி தரும்**
**தனிமைக்கு துணையாகும்**
**வாழ்வுக்கு வழிகாட்டும்**
**வார்த்தைக்கு வளம் சேர்க்கும்**

வாசிப்பைத் தூண்டும் "சொற்படிகள்" கட்டும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள். 5ம் வகுப்புத் தொடக்கம் .11ம் வகுப்பு வரை கற்கும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். முன்பு அங்கத்துவ எண் பெற்றவர்கள் அவ்வெண்ணைக் குறிக்கத் தவறவேண்டாம். புதியவர்க்கு போட்டியில் பங்குபற்றும்போது அங்கத்துவ எண் தரப்படும்.

சொற்படிகள் (1)



இங்கு பத்துப் படிகள் உள்ளன. இதனைப் பிரதி செய்க. 2-10 படிகளை நிரப்பும் சொற்கள் காவலன் இதழ் 10இல் உள்ளன. படிகளை நிரப்ப துணைத் தரவுகள் பின்வருமாறு.

1ம் படி: மணக்கும் சொல்.
2ம் படி: வன்னிக்கான பாதையைத் திறக்கும்படி ஜனாதிபதிக்கு இவ்வூர் ஆயர் கடிதம் எழுதினார்.
3ம் படி: இந்நகர் எருசலேமைக் குறிக்கும்
4ம் படி: 1917இல் தேவதாயார் காட்சி கொடுத்த நகர்
5ம் படி: இச்சபையினர் 150வது ஆண்டில் நிற்கின்றனர்
6ம் படி: 16.6.99இல் செம்மணியில் இவை தோண்டப்பட்டன
7ம் படி: கிறிஸ்தவ நாகரிகத்துறையில் இவர்கள் வரலாறு ஆழமாக ஆராயப்பட வேண்டும்
8ம் படி: சட்டத்தை இது செய்தல் ஞானத்திற்கு செவிமடுத்தல் மூலம் நற்பேறு பெறலாம்.
9ம் படி: இளவாலை மறைக்கோட்டத்தில் 20-7-99இல் இது ஆரம்பமாகும்.
10ம் படி: மூன்று வருடம் ஆறுமாதங்களின் பின் மீண்டும் வரும் சிறுவர் பகுதி.

விடைகளை விரைந்து அனுப்புங்கள்.
பரிசுத்திட்டம் பற்றி பின்னர் அறிவிக்கிறேன்.

*இறை வார்த்தையை நேசி*
*தினம் வாசி*
*நன்கு யோசி*

நன்றி.

அன்பின்

*அன்புவிழி*

## பாதுகாவலன் சிறுவர் வாசக வட்டத்தினரே!

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கட்டுரை, சித்திரப்போட்டி

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கத்தின் சிறுவர் பிரிவு, நாடளாவிய ரீதியில் கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

பாதுகாவலன் சிறுவர் வாசக வட்டத்தினரும் இதில் பங்குகொள்ளும் முகமாக. விபரங்களை கீழே தருகின்றோம்.

கனிஸ்ட பிரிவு வயது:- 12-15
சிரேஸ்ட பிரிவு வயது:- 16-18


கட்டுரைத் தலைப்பு : சமுதாயமும் சிறுவர் உரிமைகளும் (1500 சொற்கள்)
சித்திரத் தலைப்பு: எமது நோக்கில் சிறுவர் உரிமைகள் (24×18 அங்குலத் தாள்)

பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரால் உறுதிப்படுத்தப்பட்டு, ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய இறுதி நாள் ஓகஸ்ட் 15, 1999.

அனுப்ப வேண்டிய விலாசம் :
போட்டி அமைப்பாளர்,
மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கம்,
225/1, கொட்டா வீதி,
கொழும்பு-8.

# புனித மார்க்சிமிலியான் கோல்பே

தொடர் குறுநாவல்



திடீரென அங்கு வந்த மற்றொரு பையன் அவருடைய "போர் வீரர்கள்" அனைவரையும் கீழே தட்டிவிட்டு, விளையாட்டைக் கெடுத்து விட்டான். அவருடைய கண்கள் குளமாயின. ஆனால் பொங்கி எழுந்த கோபத்தைக் கட்டுப்படுத்தி, ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் மௌனமாயிருந்துவிட்டார். 15 வயதுப் பையன் கொண்டிருந்த மனவலிமை எத்துணை பாராட்டுக்குரியது!

ஒருநாள் மாலை வேளையில் வரவேற்பு அறையில் அவருக்காக ஒரு பெண்மணி காத்துக் கொண்டிருப்பதாக அவர் கேள்விப்பட்டார். அங்கே அவர் சென்று பார்த்தபொழுது தன் தாய் நிற்பதைக் கண்டார். எதிர்பாராத விதமாய் அவள் வந்திருந்தாள். கவலைக்குரிய செய்தி எதுவும் கொண்டு வந்திருந்தாளா?


இல்லை, அவள் கொண்டு வந்திருந்த செய்தி யாதெனில்: அவருடைய தம்பியும் குருவானவராக வேண்டுமெனத் தீர்மானித்து, ஏற்கனவே ஒரு குருமடத்தில் சேர்ந்துவிட்டான். அவருடைய தந்தையும் "கிரோக்கோவ்" என்ற பட்டணத்தில் குருத்துவத்துக்காகப் படிக்கப் போகிறார். அவளும் ஒரு கன்னியராவதற்காக "லெவாவ்" (Lwow) என்னும் பட்டணத்திலுள்ள மடத்தில் சேரப் போகிறாள். இவ்வாறு குடும்பம் முழுவதுமே இறைவனுக்குச் சொந்தமாகப் போகிறது.

மாக்சிமிலியான் தொடர்ந்து படித்தார். 18வது வயதில் ஏழ்மை (தனக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமை), தூய்மை-விரதத்துவம் (ஒருக்காலும் திருமணம் செய்து கொள்வதில்லை), கீழ்ப்படிதல் என்னும் மூன்று வார்த்தைப்பாடுகளை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். இந்த வார்த்தைப்பாடுகள் அவரை ஒரு துறவியாக, அதாவது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவராக, மாறச் செய்தன. துறவிக்குரிய அங்கியையும் அணிந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்.



அதன்பின், மேல்படிப்புக்காக அவரை உரோமாபுரிக்கு அனுப்ப, அவருடைய அதிபர்கள் தீர்மானித்தனர். அவர் உரோமாபுரியில் தங்கிய தொடக்க நாட்களை ஆலயங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களையும் தரிசிப்பதில் செலவிட்டார். அவர் அதிகம் விரும்பிய ஆலயம் புனித இராயப்பருடைய பேராலயமாகும். அதுதான் பாப்பரசருடைய ஆலயம். உலகிலேயே மிகப்பெரிய ஆலயம் அது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு இடமளிக்கக்கூடிய பிரமாண்டமான ஆலயம்.

ஆனால், அவருடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தது "கொலோசியம்" என்று சொல்லப்படும் மாபெரும் வட்ட வடிவமான கட்டிடம்; ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னதாக எழுப்பப்பட்டது. அதன் மத்தியில், உரோமானியர்கள் ஈடுபட்ட விளையாட்டுக்களுக்கு வசதியான பெரியதோர் அரங்கமும் இருந்தது. அங்கே மக்களை மிருகங்களோடும், தமக்குள்ளாகவும்கூட போராடச் செய்வார்கள்.



சில உரோமை மன்னர்கள் மிகவும் கொடூரமானவர்கள். அவர்களுக்கு விருப்பமில்லாத மக்களை, சிங்கம், கரடி போன்ற கொடிய மிருகங்களிடையே தள்ளி, விழுங்கச் செய்வார்கள். அந்த மன்னர்களின் அதிக வெறுப்புக்கு ஆளானவர்கள் கிறிஸ்தவர்கள். ஏனெனில், அவர்கள் இயேசு கிறிஸ்து மெய்யாகவே இறைவன் என வெளிப்படையாக அறிவித்தனர். எனவே, அவர்களில் பலர் இவ்வாறு கொல்லப்பட்டனர்.

உரோம் நகரை அடைந்த பின்னர், பாஸ்கா திருவிழாவிற்கு (மரித்த யேசு மூன்றாம் நாள் உயிர்த்த நினைவு நாள்) சகோதரர் மாக்சிமிலியான் தன் தாய்க்கு வாழ்த்துக் கூறிக் கடிதம் எழுதினார். அவர் எழுதியது . . .

(தொடரும்)

# சிந்திக்க ஒரு கதை

தமிழ் மக்கள் சிறுகதைகளோடு ஊறிப் போனவர்கள். பழங்கதை, பாட்டிகதை, தென்னாலிராமன் கதை, நாட்டார் கதை என்று கதை வகைகள் வளர்ந்துகொண்டே போகின்றன.

"சிந்திக்க ஒரு கதை" என்ற தலைப்பில் ச. அகஸ்ரின் எழுதிய "வழியோரக் கனவுகள்" என்ற நூலிலிருந்து தொடர்ச்சியாக சில கதைகளை உங்கள் சிந்தனைக்கு முன்வைக்கிறோம்.

(ஆ-ர்)

## அமைதி

புகழ்பெற்ற சந்நியாசி பாவா.
வைசாகி அரசன் அவரை அழைத்து கடவுளைப் பற்றிப் பேசும்படி சொன்னான்.
பாவா வந்தார். அரசவையில் அரசனுக்கும், அமைச்சருக்கும் முன்னிலையில் அமைதியாக அமர்ந்தார்.
பல நாட்கள் இவ்வாறு கடந்தன. அவர் பேசவே இல்லை. இறுதியாக ஒருநாள் அரசன் பொறுமை இழந்தவனாக அந்த இறையடியாரிடம் கேட்டான்:
"இறைவனைப் பற்றிப் பேசத்தானே உம்மை அழைத்து வந்தோம். நீர் பேசாமல் இருக்கிறீரே. . . ?"
"நான் பேசிக்கொண்டுதானே இருக்கிறேன். நீங்கள்தான் புரிந்து கொள்ளவில்லை."
"நீர் அமைதியாக அல்லவா இருந்தீர்"
"கடவுள் அமைதிதானே ?"

**இறைவனின் அமைதியைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் இறைவனின் வார்த்தையைப் புரிந்துகொள்ள முடியாது. இறைவனின் அமைதிதான் உண்மையான வார்த்தை. அந்த அமைதியை இதயத்துள் இருத்தி மனதை ஒருநிலைப்படுத்தினால் வார்த்தை மனுவுருவாகும்.**

**அமைதி என்பது நித்தியத்தைப் போன்று ஆழமானது.**
**பேச்சு என்பது காலத்தைப் போன்று மேலோட்டமானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரான்சிஸ்கன் சபையினரின் ஒருநாள் ஆன்மீக யாத்திரை

பொதுநிலை பிரான்சிஸ்கன் சபையாராகிய நாம் 28.6.99 அன்று ஒரு நாள் ஆன்மீக யாத்திரைக்காக சபையின் ஆன்மீக இயக்குனரும் குரு முதல்வருமாகிய அருள்திரு ஜெ. பி. ஈ. செல்வராஜா அடிகளாரின் ஆசீருடன் இனிய காலைப்பொழுதில் சின்னமடு சாட்டி போயிருந்தோம். இந்த யாத்திரையில் ஆன்மீக வழிகாட்டியாக அருள்திரு பி. ஜேக்கப் யோகராஜா அ.ம.தி அடிகள் எங்களோடு சமூகம் தந்து, சின்னமடுவில் தேவநற்கருணை எழுந்தேற்றத்தையும் சிறு வழிபாட்டையும், தியானத்தையும் நடத்தினார். பின்பு சாட்டியில் மதிய வேளைத் திருப்பலியும் மறையுரையும், அன்பியப் பகிர்தலும் இடம்பெற்றது. அதன் பின்பு நீராடி மகிழ்ந்து எம் யாத்திரையை நிறைவு செய்தோம். அன்று கிட்டத்தட்ட 200 உறுப்பினர்கள் வருகைதந்தது குறிப்பிடத்தக்கது. இந்த யாத்திரையை சபைத்தலைவர் சகோதரர் L. C. நீக்கிலஸ் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.

தகவல்:
எல். எஸ். மரியாம்பிள்ளை

### நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் மையம்~அருட்திரு ஏ. சி. கிறிஸ்தோப்பர்

யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலய திருஇருதய சபையின் ஆண்டு நிறைவு விழா, கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தப் பெருவிழாவாகிய 6-6-99 ஞாயிறன்று சகோதரி அஞ்சலா யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்திரு A. C. கிறிஸ்தோப்பர் அடிகள் ஒரு கிறிஸ்தவனின் இவ்வுலக வாழ்வின் மையமாக தேவநற்கருணை விளங்குவதாகவும், நாளாந்தம் தகுதியான முறையில் திருவிருந்தில் பங்கெடுப்பதன் மூலம் முடிவில்லாத வாழ்வை நாம் பெற முடியும் என்றும் எடுத்துக் கூறி திருஇருதய சபையானது நற்கருணையை மையமாகக் கொண்ட வழிபாடுகளை நடத்துவதோடு நற்கருணையின் மகத்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்து சொல்லி விசேஷமாக, குருக்களுக்காக நாளாந்தம் செபிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அன்று காலை அருட்திரு பா. பி இராஜசிங்கம் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்க திருஇருதய சபை அங்கத்தவர்கள் அனைவரும் வழிபாடுகளிலும் காணிக்கைப் பவனியிலும் பங்குபற்றியமை சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. பேராலயத்தில் உள்ள அனைத்து பக்தி சபைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் கலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெற்றுள்ளது. ஈற்றில் செயலரின் நன்றி உரையோடு விழா நிறைவெய்தியது.

இ. அ. அமலரட்ணம்
பேராய நிருபர்

## அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டம்

### (07) ஏழு புலமைப் பரிசில்கள்

1999இல் வெளியான க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளின்படி, அதிக தகமைகளைப் பெற்றுச் சித்தியடைந்து க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு (2001 - ஆவணி) தகுதிபெற்ற ஏழு (07) மாணவர்களுக்கு மேற்படி கல்வி உதவித் திட்டம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

ஏழு மாணவர்களும் யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாணவர்கள் தகுதியறிந்து பங்குத் தந்தையர்கள் தமது வட்டாரக் குருமுதல்வர் ஊடாக, கல்வி உதவித் திட்ட நிர்வாகத்திடம் அவர்கள் பெயர்களைச் சமர்ப்பிப்பார்கள்.

எச் சமயத்தைச் சார்ந்த மாணவர்களும் இப் பரிசில்களுக்குத் தகுதி உடையவராகலாம்.

க.பொ.த. உயர்தர வகுப்பைத் தொடர அடிப்படைப் பொருளாதார வசதியற்ற திறமைசாலி மாணவர்களுக்கு மட்டுமே இவ்வுதவி ஆகக் கூடியது (02) இரு வருடங்களுக்கு வழங்கப்படும்.

வழங்கப்படும் உதவி கல்வி நேரடித் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கல்வி உதவித் திட்டம் உறுதி செய்யும்.

புலமைப் பரிசில்கள் சம்பந்தமான இறுதி முடிவுகள் எல்லாம் கல்வி உதவித்திட்ட நிர்வாகத்திற்கே உரிமையானது.

இவ்வுதவியில் பங்குபெற விரும்பும் மாணவர்களே! இதற்கென உரிய விண்ணப்பப் படிவத்தை உங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 20.08.1999 க்கு முன்பதாக உங்கள் பங்குத் தந்தையரிடம் சமர்ப்பிக்கவும்.

ஆயர் இல்லம்
த.பெ. இல. 02
யாழ்ப்பாணம்.

செயலர்
"BEAS"

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. எலியாஸ் மாக்றெற்

மலர்வு 10.11.1921 உதிர்வு 01.08.1997

ஆண்டவர் என்றுமே என் கண்முன்னால் உள்ளார்
இதனால் என் உள்ளம் மகிழ்ந்தது.

இறையண்டை சேர்ந்தீர்
இரு ஆண்டுகளாயிற்று
தினந்தோறும் உம் நினைவில்
வாழ்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்:
மகள்-எலியாஸ் யசிந்தா
மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

வளன்புரம்.

## உலகில் கிறிஸ்தவ நடப்பவை சில...

தொகுப்பு : பி. நியூட்டன்

### கருதினால் ஹியூம் காலமானார்

இங்கிலாந்திலுள்ள வெஸ்ற்மின்ஸ்டர் பேராயரான கருதினால் ஜோர்ஜ் பசில் ஹியூம் ஜுன் 17ம் திகதி தமது 76வது வயதில் காலமானார். நீண்டகாலம் இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவரது மரணத்தைப்பற்றிக் கேள்வியுற்ற திருத்தந்தை தனது அனுதாபச் செய்தியை வெஸ்ற்மின்ஸ்டர் பரிபாலகருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

1975 மார்ச் 25ம் திகதியன்று இவர் ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டார். அதே ஆண்டில் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் அவருக்குக் கருதினால் பட்டமும் அளிக்கப்பட்டது.

1982ல் இங்கிலாந்திற்கும் ஆர்ஜென்டினாவிற்குமிடையே போர் நிகழ்ந்தபோது இரு நாடுகளின் ஆயர்களுடனும் சேர்ந்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தார்.

கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான உரையாடல் கருதினால் ஹியூமின் பணியில் முக்கிய இடம் வகித்தது 1978ல் அங்கிலிக்கன் திருச்சபையின் பேரவைக் கூட்டம் ஒன்றில் அவர் கலந்துகொண்டார். 400 ஆண்டுகளுக்குப்பின் ஒரு கத்தோலிக்க ஆயர் கலந்து கொண்டது இதுவே முதற் தடவையாகும். இவர் பிற கறிஸ்தவ சபைகளுடன் அன்பையும் சகோதர உறவையும் வளர்த்து வந்தார். வட அயர்லாந்தில் சமாதானத்தை ஏற்படுத்த இவர் இடையறாது முயற்சி செய்ததுடன் ஏழை எளியவர்களுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் இவர் ஓயாது குரல் கொடுத்து வந்தார்.

### ருவாண்டாவில் திருச்சபைக்கு எதிரான சதி

இன்று ருவாண்டா அரசு திருச்சபைக்கு விரோதமான கொள்கையை கடைப்பிடித்து வருவதாகத் தெரிகிறது. 1994ல் நாட்டை சின்னாபின்னமாக்கிய டுட்சி இனத்தவர் படுகொலைக்கு திருச்சபையும் பொறுப்பு எனக் காட்ட முயலும் அவதூறுகள் பரப்பட்டு வருகின்றன. இதற்கு முதல் இலக்காக ஆயர் அகஸ்தீன் மிசாகோ ஏப்ரல் 14ம் திகதி கைது செய்யப்பட்டார். 150,000 டுட்சி இனத்தவரின் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்ததாகவும், குறிப்பாக தன்னிடம் தஞ்சம் கோரிய 30 மாணவிகளின் கொலைக்குப் பொறுப்பாக இருந்ததாகவும் அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதே போன்று ருவாண்டாவில் 38 வருடம் பணியாற்றிய பின் 1993ல் வெளியேறி தற்போது சுவிற்சர்லாந்தில் வசித்துவரும் முன்னாள் ஆயர் அந்திரே பெராவுதின் மீதும் குற்றம் சாட்டி பிரச்சாரம் நடந்து வருகிறது.

நாட்டில் 5 வருடங்களுக்கு முன் நடந்த இப்படுகொலையில் 3 ஆயர்கள், 123 குருக்கள், 300க்கு மேற்பட்ட கன்னியர்கள் உட்பட 5 இலட்சம் பேர் பலியானார்கள். இதைத் தொடர்ந்து பழிவாங்கலாக ஹூட்டு இனத்தவர் மேல் மேற்கொள்ளப்பட்ட படுகொலையில் 10 இலட்சம் ஹூட்டுக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அரசு டுட்சி இனத்தவர் படுகொலை பற்றி மட்டுமே ஒருதலைப்பட்சமான விசாரணை நடத்துவதாகக் கூறப்படுகிறது.

### பாப்பரசரின் இந்திய விஜயம் ரத்து?

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இந்தியாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ள விருப்பமுடையவராக இருக்கிறார் என்றும், அவர் விஜயத்திற்கான அனுமதியை, பாகிஸ்தான் யுத்தத்தைக் காரணம் காட்டி இழுத்தடித்து வருவதாகவும், இதனால் இவ் விஜயம் இரத்துச் செய்யப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. இந்திய அரசு அனுமதி வழங்குதலில் உறுதியான தீர்மானத்தை தெரிவிக்கவில்லை, இதனால் பாப்பரசரின் இந்திய விஜயம் இரத்துச் செய்யப்படும் என்று வத்திக்கான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின் இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

## நலன்களை நல்கி நல்வழிநடத்திவரும் யாழ் பல்கலைக்கழக நல்லாயன் நிலைய வெள்ளி விழா

யூலை நாலாம் நாள் யாழ் பல்கலைக்கழக வரலாற்றில் ஓர் பொன்னான நாளாகும். மாலைகள் காற்றிலாட, மங்கள நாதம் ஒலிக்க, மாணவர் அணிவகுத்து நிற்க, மாலையிடப்பட்டு அழைத்து வரப்பட்ட ஏம் யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் குருமுதல்வரும், குருக்களும் இணைந்து நன்றிப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. யோ. கோல்டன் கோமறா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. யாழ் ஆயர் பேரருட்திரு, தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தமது உரையில், நாளைய தலைவர்களான புத்திஜீவிகள் சமூக எழுச்சிக்கு பெரும்தடையாக இருப்பதாகவும், எனவே சமூக எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பல்கலைக்கழகத்தின் பங்கு அவசியமானது என்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இந்த வரலாற்று நெருக்கடியில் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிறிஸ்தவ மாணவர்களின் பங்களிப்பு இன்றைய தேவையாகும் என்று கூறினார். எமது பிரதம விருந்தினரும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தருமாகிய பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது உரையில், கத்தோலிக்க மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழக மாணவ சமூகத்துடனும் நட்புறவுடனும், சகோதரத்துவத்துடனும் நடந்து கொள்வது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். மேலும் இம் மன்றத்தினுடைய செயற்பாடுகள் அவர்களுடைய சமூக, சமய, பண்பாட்டு விழுமியங்களை முன்னெடுத்துச் செல்வதாகவும், மாணவர் மத்தியிலும் சமூகத்திற்கும் விழிப்புணர்வை ஊட்டுவதாகவும் அமைந்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது என்றும் கூறினார்.

நல்லாயன் நிலைய வழிகாட்டி அருட்தந்தை றெஜிஸ் ராஜநாயகம் அவர்கள் தமது உரையில், இளம் மாணவர்கள் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டு வாழவேண்டும் என்றும், ஆவியின் பொழிவைப்பெற்று அளப்பரிய செயற்பாடுகளை, காலத்தின் தேவையுணர்ந்து ஒன்றிணைந்து, முனைந்து செல்ல வேண்டுமென்றும் கூறினார்.

வெள்ளிவிழா ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு, இதழாசிரியர் திரு. அ. டெனி தலைமையில் நடைபெற்றது. 'உறவுகள்' என்னும் இம்மலரைப் பிரதம விருந்தினர் அவர்கள் வெளியிட அதன் முதற் பிரதியைக் கிறிஸ்தவ நாகரீகத்துறைத் தலைவர், கலாநிதி அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலத்திலிருந்தே கத்தோலிக்க மாணவர் சங்கம் இயங்கி வந்துள்ளது. தற்போதுள்ள 2000 மாணவர்களில் சுமார் 400 பேர் கத்தோலிக்கராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை திரேசா அமைதி இல்லம்

அன்னை திரேசா சபையினர் யாழ் மறைமாவட்டத்தில் தம் பணிகளுக்காக வருகை தந்தது பற்றிய எமது செய்தியினை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அன்னை திரேசா சபையினர் தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அண்மையில் தமது நிரந்தர இல்லத்தில் பணிகளை ஆரம்பித்து உள்ளனர். ஐந்து சகோதரிகளுடன் தம் பணியினை ஆரம்பித்துள்ள இவர்களுடைய பணிமனையை யூலை மாதம் 24ந்திகதி யாழ் ஆயர் அதிகார பூர்வமாகத் திறந்து வைத்தார்.

ஓர் இந்துசமயப் பின்னணியில் தம்பணிகளை ஆரம்பித்துள்ள இவர்கள் சமய வேறுபாடின்றி குடும்பங்களைத் தரிசிக்கவும், ஆன்மிக ஆலோசனைகளை வழங்கவும் ஆரம்பித்துள்ளனர். ஒவ்வோர் நாளும் இரு சகோதரிகள் மவுண்கார்மல் வீதியிலுள்ள தமது இல்லத்திற்கு வந்து ஏறக்குறைய 150 வறிய பள்ளிச் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்கி வருகின்றனர்.

அன்னை திரேசாவின் வழியில் இவர்களும் தம் பணிகளைச் செய்ய பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## அமலமரித்தியாகிகள் மகாநாடு

யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அமலமரித் தியாகிகளுக்கான மகாநாடு 2000 ஜனவரி 4ம் திகதியிலிருந்து 7ம் திகதி வரை, பிலியந்தல சுகபோதியில் நடைபெறவிருக்கின்றது.

மகாநாட்டு ஆயத்தக் குழு ஏற்கனவே கூடி அருட்திரு போல் நட்சத்திரம் அவர்களை செயலாளராக தெரிந்துள்ளது. ஆரம்ப கட்ட விடயங்களைப் பற்றி இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அக் குழுவில் அருட் தந்தையர்கள் பிரான்சிஸ் டானியேல் (தலைவர்), போல் நட்சத்திரம், எட்வின் வசந்த ராஜா, பிரான்சிஸ் லொஷிங்டன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

## கரிற்றாஸ் நிறுவனத்தின் மகாநாடு

அகில இலங்கை கரிற்றாஸ் நிறுவனத்தின் மகாநாடு யூலை 18ம் திகதியிலிருந்து 22ம் திகதிவரை அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நடைபெற்றது. ஆயர்கள், மறை மாவட்ட இயக்குனர்கள், சமூகப் பணியாளர்கள் பங்குபற்றும் இக்கூட்டத்திற்கு அவுஸ்ரேலியா, நோர்வே, பிரான்ஸ், சுவிஸ், லக்சம்பேர்க் நாடுகளின் கரிற்றாஸ் பிரதிநிதிகளும் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையில் கரிற்றாஸ் மேற்கொள்ளும் புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளுக்கு இவர்கள் துணை புரிபவர்களாதலால், இங்குள்ள நிலையங்களின் பணியை மதிப்பீடு செய்யவும், எமது தேவைகளை அறிந்து கொள்ளவும் இவர்களது வருகை துணைபுரியும்.

## வன்னி பணித்தளங்கள்.

அருள்திரு. ரீ. ஏ. தவராஜசிங்கம், பங்குத்தந்தை, முல்லைத்தீவு
அருள்திரு. எஸ். யூட் அமலதாஸ், உதவிப்பங்குத்தந்தை, முல்லைத்தீவு
அருள்திரு. யே. பீ. அன்ரனி, அமதிபுரம்
அருள்திரு. ஏ. ஜே. யாவிஸ், பங்குத்தந்தை, புதுக்குடியிருப்பு
அருள்திரு. ஜி. ஏ. பிரான்சிஸ் யோசவ், புதுக்குடியிருப்பு
அருள்திரு. யே. மரிய செபஸ்ரியன், பங்குத் தந்தை, தருமபுரம்
அருள்திரு. எஸ்தாகூர் செபஸ்ரியன், பங்குத்தந்தை, ஜெயபுரம்
அருள்திரு. ஜி. பீற்றர் பங்குத்தந்தை, குமுளமுனை
அருள்திரு. எஸ்.என்.சீ. ஞானராஜா, பங்குத்தந்தை, இரணைப்பாலை
அருள்திரு. ரீ. ஏ. யே. மதுரநாயகம், வன்னேரிக்குளம்
அருள்திரு. எம். எக்ஸ். கருணாரெத்தினம், பங்குத்தந்தை, மல்லாவி
அருள்திரு. யேம்ஸ் பத்திநாதர், இயக்குனர், ஆரோபணம், தென்னியன்குளம்
அருள்திரு. பீ. இருதயதாஸ், மறைக்கோட்ட முதல்வர், அமதிபுரம்
அருள்திரு. றெக்ஸ் சவுந்தரா, உதவிப்பங்குத்தந்தை, தென்னியன்குளம்.
அருள்திரு. ஏ. யோர்ச், பங்குத்தந்தை, வலைப்பாடு
அருள்திரு. பேனாட் றெக்னோ, அமதிபுரம்
அருள்திரு. ஜீ. அற்புதராஜா அ.ம.தி. அன்பகம், முழங்காவில்
அருள்திரு. அந்தோனிமுத்து குரூஸ் அ.ம.தி. பங்குத்தந்தை, இராமனாதபுரம்
அருள்திரு. அன்ரனி பொன்சியன் அ.ம.தி. உதவிப் பங்குத்தந்தை, அமதிபுரம்.
அருள்திரு. எஸ். ஸ்ரனிஸ்லொஸ் அ.ம.தி. பங்குத்தந்தை, அமதிபுரம்
அருள்திரு. ஜோயல் குலநாயகம் சே.ச. இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு
அருள்திரு. கபிரியேல் சே. ச. இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு

## அமலமரித் தியாகிகள் சபையின் வட மாகாண முதல்வரின் ஆலோசகர்கள்

அமலமரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாண முதல்வர் அருள்திரு. ஜீவாபோல் அடிகளாரின் ஆலோசகர்களாக:
அருள்திரு போல் நட்சத்திரம்
அருள்திரு வின்சன் பற்றிக்
அருள்திரு ஸ்ரனி அன்ரனி
அருள்திரு இம்மானுவேல் யேசுதாசன்
ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய அதிபர்கள்

அமலமரித் தியாகிகளின் அமல உற்பவம் இறையியல் பெரிய குருமடத்தின் அதிபராக அருள்திரு போல் நட்சத்திரம் நியமிக்கப்பட்டுள்ளார். அதிபராக இருந்த அருள்திரு ஜீவா போல் அடிகள் மாகாண முதல்வராக நியமனம் பெற்றது தெரிந்ததே. புனித சூசையப்பர் சிறிய குருமடத்தின் அதிபராக அருள்திரு பிரான்சிஸ் லொஷிங்ரன் நியமனம் பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் தம்பணிகளை செப்ரெம்பர் மாதத்திலிருந்து ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எமது பணிமனைக்கு உணவு தருமாறு கோரி பலர் தினமும் வருகிறார்கள்

புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை அருள்திரு அ. யாவீஸ்

வன்னி நிலமை மோசமடைந்து கொண்டு செல்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து பொருள்கள் எல்லாம் தடைப்பட்டபடியால் பட்டினிக் கொடுமை ஒரு புறம், மேலதிக சிகிச்சை பெறமுடியாது உரிமைபோர்க்கொடுமை மறுபுறம், இதனால் எமது பங்கின்பணிமனைக்கு தமக்கு உணவு தருமாறு கோரி பலர் வருகிறார்கள் என்று புதுக்குடியிருப்பின் பங்குத்தந்தை யாவீஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

## புதிய நியமனங்கள்

அருள்திரு எம். இ. பயஸ் பங்குத்தந்தை, யாழ் அடைக்கல அன்னை ஆலயம்.
அருள்திரு பீற்றர் துரைரட்ணம் பங்குத்தந்தை, நாவாந்துறை.
அருள்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம் பங்குத்தந்தை, யாழ் யுவானியார் ஆலயம்.
அருள்திரு எஸ். எம். பி. ஆனந்தக்குமார் பங்குத்தந்தை, சாவகச்சேரி
அருள்திரு சீ. யோ. அன்ரனிபாலா பங்குத்தந்தை, இளவாலை
அருள்திரு ஏ. யேசுதாஸ் பங்குத்தந்தை, ஊர்காவற்துறை
அருள்திரு ஏ. யூட் நிக்சன் உதவிப்பங்குத்தந்தை, ஊர்காவற்துறை
அருள்திரு ஆர். ஜோர்ச் உதவிப்பங்குத்தந்தை, பருத்தித்துறை
அருள்திரு ஏ. அகஸ்ரின் உதவிப்பங்குத்தந்தை, மிருசுவில் முகமாலை.

## மறை மாவட்ட கலை பண்பாட்டுக் குழு

மேற்படி குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் 17.07.1999 அன்று யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. செபவழிபாட்டுடன் ஆரம்பித்த கூட்டத்தில், குழுவின் தலைவர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் உறுப்பினரை வரவேற்று, மானிட கிறிஸ்தவ உணர்வில் நமது கலை பண்பாட்டு செயல் முறைகளை ஊக்குவிக்க உற்சாகத்துடன் உழைக்குமாறு உறுப்பினரைக் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் கலந்துகொண்ட ஆயர் அவர்கள் மறைமாவட்ட கலை பண்பாட்டுக் குழுவின் நோக்கம் நமது கலை பண்பாட்டு மரபுகளை கிறிஸ்தவ மதிப்பீடுகளில் வளர்த்தெடுத்தல், பல்வேறு மட்டங்களில் இவற்றை உற்சாகப்படுத்துதல், அவற்றைப் பேணுதல் ஆகும், என்று விளக்கியதுடன், இதன் மூலம் மண்ணின் மயமான திருச்சபையை உருவாக்க முடியும் என்றும் கூறினார். தொடர்ந்து செயற்குழுத் தேர்வு இடம்பெற்றது. துணைத்தலைவராக அருட்திரு R.C.X. நேசராஜா அடிகளும், செயலராக திரு. A.R. விஜயகுமார், துணைச் செயலராக திரு. ஜோன்சன் ராஜ்குமார், பொருளாளராக அருட்சகோதரி அழகேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து இந்தக் குழுவின் யாப்பு தயாரிப்பு, வருடாந்த செயற்திட்டம் கலந்துரையாடப்பட்டது. மறை மாவட்டத்தில் எல்லாப் பங்குகளிலும் உள்ள நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள் ஆகியோரின் தகவல்களை கோவைப் படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த பாதுகாவலன் பல புதிய ஆக்கங்களுடன் ஆவணி 15இல் வெளிவரும்

## வன்னி மக்களைக் காப்பாற்ற . . . (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் அவர்களுடைய வேண்டுகோளை பாதுகாவலன் வாசகர்களுக்கென முழுமையாக இங்கு தருகின்றோம்.

கடந்த 27 நாட்களுக்கு மேலாக வன்னிக்கான அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டு அனைத்துப் போக்குவரத்தும் அத்தியாவசிய உணவு விநியோகமும் துண்டிக்கப்பட்டு இருக்கின்றது. இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் மக்கள் பசி, பட்டினி வருத்தம் துன்பம் போன்ற இடர்களால் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கின்றார்கள். எனவே உடனடியாக ஒரு பாதையைத் திறந்து அத்தியாவசிய உணவு விநியோகத்தை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கும்படியாக மேன்மை தங்கிய ஜனாதிபதியையும், இராணுவத் தளபதியையும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. டக்ளஸ் தேவானந்தாவையும் அவசர கடித மூலம் கேட்டிருந்தோம். அதற்கு திரு. டக்ளஸ் தேவானந்தா தான் ஜனாதிபதியை இவ்விடயமாகக் கண்டு இதன் உடனடித் தேவையை வலியுறுத்தியதாக அறிவித்துள்ளார். ஆனால் சுமுகமான ஒரு முடிவை இதுவரையும் அரசு அறிவிக்கவில்லை.

கொடிய யுத்தத்தினாலும் பல்முறை இடப்பெயர்வுகளாலும் வெகுவாய் நொந்திருக்கும் எம் மக்கள், பசி, பட்டினியால் செத்து மடியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மருத்துவ வசதி இன்மையாலும் பட்டினியாலும் இறப்போர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப் பேரழிவில் இருந்து மக்களைக் காப்பாற்ற அரச தரப்பினரும், எதிர்க் கட்சிகளும் ஒன்றித்து மனித நேயத்துடன் ஒரு பாதை திறப்பதற்கு உடன் செயற்பட வேண்டுகிறோம்.

- ✠†தோமஸ் சவுந்தரநாயகம், யாழ் ஆயர் -

## யாழ் மறைமாவட்ட. . . . (1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் வாழும் மக்கள் தொடர் இராணுவப் பொருளாதார முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டு, பட்டினிச் சாவை நோக்கி நகர்த்தப்படுகின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய பகுதிகளில் பல நூற்றுக்கணக்கானோர், அண்மைக் காலங்களில் அடையாளம் காட்டப்பட்டு வரும் பாரிய மனிதப் புதைகுழிகள் இவர்களில் எவருமே உயிருடன் இல்லையோ என்று அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவைதவிர இன்னும் எழுந்தமானமான கைதுகள் தொடர்கின்றன.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரால் துயர் சுமக்கும் கத்தோலிக்க மக்களாகிய நாம் இவ்வருளின் காலத்தில் தங்களது விசேடமான அக்கறையையும் ஆத்மீக அரவணைப்பையும் தர்மீக ஆதரவையும், சமாதானத்திற்கான முன் முயற்சியையும் வேண்டி நிற்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்டைதீவில் சம்பேதுருவானவர் திருநாள்

எதிர்வரும் ஆவணி 1ம் திகதி மண்டைதீவு சம்பேதுருவானவர் ஆலயத் திருவிழாவைக் கொண்டாட நாரந்தனைப் பங்குத்தந்தை J.J மவுலிஸ் அடிகளாரால் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மூன்று நாள் ஆயத்தங்களோடு ஆவணி முதலாந்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட இருக்கிறது.

கடந்தகால இடம்பெயர்வின் பின்னர் மண்டைதீவு ஒரு அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கின்றது. ஏறக்குறைய 12 கத்தோலிக்க குடும்பங்களே அங்குள்ளன. இவர்களுக்கான திருப்பலிகள் அனைத்தும் மண்டைதீவு தெற்கு கடற்கரையோரத்தில் அமைக்கப் பட்டுள்ள தற்காலிக கொட்டில் ஒன்றில் நடைபெறுகின்றது. கடந்த எட்டு வருடங்களின் பின்னர் திருநாள் இப்போதுதான் கொண்டாடப் படவிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197